**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.59
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபு

**முனைவர் க. சாமுவேல் பாபு**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பிஷப் அப்பாசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி

ரேஸ்கோர்ஸ், கோயம்புத்தூர் 641 018, பேசி 9600428325

மின்னஞ்சல் samuelbabu4192@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனித சமுதாயத்தின் தோற்றத்தோடு வழிபாட்டு மரபுகளும் தோன்றின. இயற்கையின் பேராற்றலைக் கண்டு வியந்த பண்டை மனிதன், தன்னைவிட உயர்ந்த சக்தி ஒன்று உலகை இயக்குகிறது என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டான். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக வழிபாடு உருவானது. பண்டைத் தமிழர்களின் வாழ்வியலிலும் வழிபாடு முக்கிய இடம் பெற்றிருந்தது. அவர்களின் சமயம், பண்பாடு, அரசியல், சமூக அமைப்பு ஆகிய அனைத்திலும் வழிபாட்டின் தாக்கம் காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் வரலாற்றுப் பெட்டகங்களாகத் திகழ்கின்றன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு, புறவாழ்க்கைக் கூறுகளை விரிவாக எடுத்துரைக்கும் சிறப்புடையது. அரசியல், போர், கொடை, வீரம், சமூக அமைப்பு ஆகியவற்றுடன் சங்ககாலத் தமிழர்களின் சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு மரபுகளையும் வெளிப்படுத்தும் அரிய சான்றுகளை புறநானூறு வழங்குகிறது. புறநானூற்றில் இடம்பெறும் வழிபாட்டு முறைகள், அக்கால மக்களின் பக்திச் சிந்தனையையும் சமூகப் பண்பாட்டையும் அறிய உதவுகின்றன. அவற்றை வெளிப்படுத்தும் வகையில் **பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்** எனும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

வழிபாடு, சமய நம்பிக்கை, புறநானூறு

**முன்னுரை**

மனிதன் தன்னைவிட உயர்ந்த சக்தி ஒன்றின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடே வழிபாடாகும். அச்சம், நன்றியுணர்வு, பாதுகாப்பு உணர்வு, வெற்றிக்கான விருப்பம் போன்ற காரணங்களால் வழிபாட்டு முறைகள் தோன்றின. சங்ககாலத் தமிழர்களின் வழிபாட்டு

மரபுகள் இயற்கை சார்ந்தும் வீரம் சார்ந்தும் தெய்வ நம்பிக்கை சார்ந்தும் அமைந்திருந்தன. மேலும், பண்டைத் தமிழரின் வாழ்வியலில் வழிபாடு வெறும் சமயச் சடங்காக மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமை, அறநெறி, வீரப்பண்பு, இயற்கை மதிப்பு, நீத்தார் நினைவு ஆகியவற்றை நிலைநாட்டும் வாழ்க்கை முறையாக விளங்கியது. தமிழர்களின் பண்பாடு மற்றும் நாகரிக வளர்ச்சியில் வழிபாடு இன்றியமையாத பங்காற்றியது. எனவே, பண்டைத் தமிழரின் வாழ்வியலை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு அவர்களின் வழிபாட்டு மரபுகளை ஆராய்தல் மிகவும் இன்றியமையாததாகும் எனும் கருத்தை நிறுவுதல் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் எனும் இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

**புறநானூற்றில் வழிபாட்டுக் கூறுகள்**

புறநானூறு சங்ககாலத் தமிழர்களின் அரசியல், சமூக வாழ்வை மட்டுமல்லாது அவர்களின் சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு மரபுகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சிவ வழிபாடு, வேள்வி வழிபாடு, நடுகல் வழிபாடு, கொற்றவை வழிபாடு, முன்னோர் வழிபாடு போன்றவை பண்டைத் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. இவ்வழிபாட்டு முறைகள் தமிழர் சமூகத்தின் ஆன்மிக முதிர்ச்சியையும் வீர மரபையும் அறநெறிச் சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, புறநானூறு வழிபாட்டு வரலாற்றை அறிய முதன்மையான இலக்கியச் சான்றாகக் கருதப்படுகிறது.

**சிவ வழிபாடு**

புறநானூறு கடவுள் வாழ்த்துடன் தொடங்குகின்றது. புறநானூற்றில் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடிய பெருந்தேவனார் சிவ வழிபாட்டை மொழிகின்றார். இறைவன் சிவபெருமான், கொன்றை மலர்களை மாலையாக அணிந்தவர்; வெண்ணிறக் காளையை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டவர். உலகைக் காப்பதற்காக நஞ்சைத் தன் கழுத்தில் தேக்கியவர். அவரது திருமேனியில் உமையம்மை ஒரு பாதியாக விளங்குகிறாள். நெற்றியில் பிறைச்சந்திரனைச் சூடிய அவர், எல்லா உயிர்களுக்கும் அடைக்கலமாகி, நீர் வற்றாத கரகத்தைக் கையில் ஏந்தி அருந்தவம் புரிகிறார் எனும் பொருள்படும் படி,

**“கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்**
**வண்ண மார்பின் தாருங் கொன்றை;**
**ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த**
**சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப;”**

**(புறநானூறு, பா.1)**

எனும் பாவை அமைத்துள்ளார்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**வேள்வி வழிபாடு**

வேத நெறிப்படி நெருப்பைச் சாட்சியாகக் கொண்டு மந்திரங்கள் ஓதி தெய்வங்களுக்கு அவிர்ப்பாகம் செலுத்தும் சடங்கே வேள்வி எனப்படுகிறது. சங்ககாலத்தில் அந்தணர்களாலும் அரசர்களாலும் இவ்வழிபாட்டு முறை மேற்கொள்ளப்பட்டது. தெய்வ அருளைப் பெறவும், நாட்டில் செழிப்பு நிலவவும், அறம் வளரவும், அரசின் பெருமையை நிலைநாட்டவும் வேள்விகள் நடத்தப்பட்டன. புறநானூற்றில் பல அரசர்கள் வேள்வி செய்த செய்தி காணப்படுகிறது. குறிப்பாக, பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பல யாகங்கள் செய்ததால் இப்பெயர் பெற்றான் என அறியப் பெறுகின்றது.

பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பல போர்களில் வெற்றி வாகை சூடியும், எண்ணற்ற வேள்விகளைச் செய்தும் சிறந்து விளங்கினான். மன்னனின் இந்தச் செயல்களைக் கண்ட புலவர் நெட்டிமையார், மன்னனின் புகழைப் பாடி மகிழ்ந்து, "நீ எதனால் சிறந்தவன்?" என்று வினவி அவனது வெற்றிகளையும் கொடைகளையும் சிறப்பித்து,

**"நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய,**
**வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்**
**நற் பனுவல் நால் வேதத்து**
**அருஞ் சீர்த்திப் பெருங் கண்ணுறை**
**நெய்ம் மலி ஆவுதி பொங்கப், பன்மாண்**
**வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,**
**யூபம் நட்ட வியன்களம் பலகொல்?"**

**(புறநானூறு, பா.15)**

எனும் பாடலைப் பாடுகிறார். மேலும், புலவர் ஆவூர் மூலங்கிழார், சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனின் பெருமையைப் புகழ்ந்து,

**"நன் றாய்ந்த நீள் நிமிர்சடை**
**முது முதல்வன் வாய் போகாது,**
**ஒன்று புரிந்த ஈரி ரண்டின்,**
**ஆறுணர்ந்த ஒரு முதுநூல்**
**இகல் கண்டோர் மிகல் சாய்மார்,**
**மெய் அன்ன பொய் உணர்ந்து,**
**பொய் ஓராது மெய் கொளீஇ,**

**மூவேழ் துறையும் முட்டின்று போகிய**

**உரைசால் சிறப்பின் உரவோர் மருக!”**

**(புறநானூறு, பா.166)**

எனப் பாடிடும் பாடலில், விண்ணந்தாயனின் இல்லமானது, நான்கு வேதங்களையும், ஆறு அங்கங்களையும் நன்கு கற்றுணர்ந்த சான்றோர்கள் கூடி, தங்களுக்குள் எந்தவித வேறுபாடுமின்றி அறவழியில் வேள்விகளைச் செய்யும் புனிதமான இடம் எனக் குறிப்பிடுகின்றார். இதனின்று, பார்ப்பனர்கள் வேத வேள்வி வழிபாட்டில் சிறந்திருந்தமை புலனாகின்றது.

**பூவை நிலை**

மன்னனைத் தெய்வங்களோடு ஒப்பிடும் நிலை பூவை நிலையாகும். மன்னர்களை இறைக்கு இணையாக வைத்து வழிபாடும் நிலை பண்டைத் தமிழர்களிடத்து காணப்பெறுகின்றது. சான்றாக, பாண்டிய மன்னன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், போர்க்களத்தில் வீரத்தையும், நாட்டை ஆளுவதில் நீதியையும், இரவலர்களுக்குக் கொடையையும் வழங்குகிறான். இவன் வலிமையிலும் புகழிலும் இந்து சமயக் கடவுளர்களான சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் ஆகியோருக்கு இணையாக ஒப்பிட்டத் தன்மையை,

**“ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை**

**மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்**

**கடல்வளர் புரிவளை புரையு மேனி**

**அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்”**

**(புறநானூறு, பா.56)**

எனும் பாடல் உணர்த்துகின்றது.

**நடுகல் வழிபாடு**

நடுகல் வழிபாடு என்பது போரில் வீரமரணம் அடைந்த அல்லது சமூகத்திற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த வீரர்களின் நினைவாகக் கல் நட்டு, அதனைத் தெய்வமாக மதித்து வழிபடும் பண்டைய தமிழர் பண்பாடாகும். இதுவே பிற்கால உருவ வழிபாட்டின் முன்னோடியாகவும் கருதப்படுகிறது. ஔவையார் அதியமானின் நினைவாக மேற்கொள்ளப்பெற்ற நடுகல் வழிபாடு குறித்து,

**“இல்லா கியரோ, காலை மாலை!**

**அல்லா கியர், யான் வாழும் நாளே!**

**நடுகல் பீலி சூட்டி, நார்அரி**

**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ**

**கோடு உயர் பிறங்குமலை கெழீஇய**
**நாடு உடன் கொடுப்புவும் கொள்ளா தோனே?"**

**(புறநானூறு, பா.232)**

எனும் பாடலில் பதிவு செய்கின்றார். அதியமானின் நினைவாக நடப்பட்ட நடுகல்லின் மீது ஊரார் மயில் தோகையைச் சூட்டி அழகுபடுத்துகின்றனர். நாரால் வடிகட்டப்பட்ட கள்ளைச் சிறிய கலத்தில் ஊற்றிப் படைக்கின்றனர். தன் உயிரைக் கொடுத்துக் காத்த அந்த வீரத் தலைவன், இந்தச் சிறிய படையலை ஏற்றுக்கொள்வானோ? எனும் கேள்வியை முன்வைக்கின்றார். மேலும்,

**"வளரத் தொடினும், வெளவுபு திரிந்து,**
**விளரி உறுதரும் தீந்தொடை நினையாத்**
**தளரும் நெஞ்சம் தலைஇ; மனையோள்**
**உளரும் கூந்தல் நோக்கி, களர**
**கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்**
**பசிபடு மருங்குலை, கசிபு, கைதொழாஅக்,**
**'காணலென் கொல் ?' என வினவினை வரூஉம்**
**பாண ! கேண்மதி, யாணரது நிலையே;"**

**(புறநானூறு, பா.260)**

எனும் பாவிலும் நடுகல் வழிபாடு எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

பகைவர்கள் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்கும் போரில், தலைவன் ஒருவன் தன் உயிரைப் பணயம் வைத்துப் போராடினான். பகைவர் வீசிய அம்புகளால் உடல் துளைக்கப்பட்டு, இறுதியில் அவன் தன் ஊரின் எல்லையில் இறந்துபோனான். போரில் இறந்த அந்த வீரனுக்கு அவனது ஊரின் முன்பகுதியில் நடுகல் நடப்பட்டு, அதற்குக் கீழ் பீலி சூட்டப்பட்டு வழிபாடு செய்யப்படும் தன்மை புலனாகின்றது.

**"பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்**
**இரும்பறை இரவல ! சேறி ஆயின்,**
**தொழாதனை கழிதல் ஓம்புமதி; வழாது,**
**வண்டுமேம் படூஉம், இவ் வறநிலை யாறே-**
**பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து,**
**கல்லா இளையர் நீங்க நீங்கான்,**
**வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்,**
**கொல்புனல் சிறையின் விலங்கியோன் கல்லே."**

**(புறநானூறு, பா.263)**

எனும் பாடலில் நடுகல் வழிபாடு பற்றி எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

காட்டு வழியே செல்லும் பாணனை அல்லது இரவலனைப் பார்த்து, வழியில் இருக்கும் நடுகல்லை வணங்கிச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறது. வெள்ளப்பெருக்கைத் தடுத்து ஊரைக் காப்பாற்றும் அணைக்கட்டு (கலிங்கு) போல, பகைவர்களால் திருடப்பட்டுச் சென்ற பசுக்கூட்டங்களை மீட்கும் போரில், எதிரிகளின் அம்புகளைத் தன் மார்பில் தாங்கி வீரமரணம் அடைந்தவனின் கல் என நடுகல் போற்றப்பெறுகின்றது.

**முன்னோர் வழிபாடு**

இல்லத்தார் தம் வீட்டில் வீரமரணம் அடைந்த முன்னோரின் நடுகல்லுக்கு படையலிட்டு வழிபட்ட பான்மையை,

**"இல் அடு கள்ளின் சில் குடிச் சீறூர்ப்**
**புடை நடு கல்லின் நாட் பலி ஊட்டி,**
**நல் நீராட்டி, நெய்ந் நறைக் கொளீஇய,**
**மங்குல் மாப் புகை மறுகுடன் கமழும்,**
**அரு முனை இருக்கைத்துஆயினும், வரி மிடற்று"**

**(புறநானூறு, பா.329)**

எனும் பாடலில் பதிவு செய்கின்றார். சிறிய வீடுகளைக் கொண்ட அந்தச் சிற்றூரில், போரில் வீரமரணம் அடைந்த முன்னோர்களின் நடுகற்கள் இருக்கும். அந்த நடுகல்லுக்கு நாளும் பலியிட்டு, நன்னீரால் நீராட்டி, நெய்விளக்கு ஏற்றி வழிபடுவர். இதனால் எழும் நெய்யின் புகை மேகம்போலத் தெருவெங்கும் கமழும் என்பது இதன் வழி புலனாகின்றது.

**முடிவுரை**

புறநானூற்றில் இடம்பெறும் வழிபாட்டு முறைகள் பண்டைத் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருந்தது. அவை சமயச் சடங்குகளாக இல்லாமல், வீரம், அறம், சமூக ஒற்றுமை, அரசியல் அதிகாரம், பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்தன. எனவே, புறநானூற்றில் வழிபாட்டின் தன்மை என்பது வாழ்வியல் சார்ந்த, சமூக நோக்குடைய, வீரநெறி மற்றும் தெய்வநம்பிக்கை இணைந்த பண்பாட்டு வெளிப்பாடு என்பது இவ்வாய்வின் வழி நிறுவப்பெறுகின்றது.

**துணைநின்றவை**

[1.] ச.வே சுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும்
[2.] மு. வரதராசனார், சங்க இலக்கிய ஆய்வு
[3.] கா. சுப்பிரமணியன், சங்ககாலத் தமிழர் வாழ்வியல்
[4.] தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு.